**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 94/2021**

2025–ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 29–ம் நாள் புதன்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 29.10.2025 | | |
| பெயர்: | ரவி (எ) ரவிச்சந்திரன் (PW–1 Chief ) | தகப்பனார் பெயர்: | கோவிந்தராஜ் |
| கிராமம்: | வேட்டங்குடி | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | விவசாயம் | வயது : | 53/2025 |

**<u>முதல் விசாரணை : 29.10.2025</u>**

நான் இவ்வழக்கின் வாதியின் அதிகாரம் பெற்ற முகவர் ஆவேன். எனக்கு வழக்கு விபரம் தெரியும். என்னுடைய சாட்சியத்தை நிரூபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அந்த நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். அந்த நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். வழக்கிற்கு ஆதரவாக கீழ்காணும் ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1. 24.07.2021 தேதியிட்ட எனது பெயரிலான சிறப்பு அதிகார ஆவணம் **வா.சா.ஆ.1** ஆகவும்

2. 24.09.1952 தேதியிட்ட தாவா சொத்தை பொறுத்து பிச்சவரம் செட்டியார் பெயரில் ஏற்பட்ட கிரய சாசனத்தின் அசல் **வா.சா.ஆ.2** ஆகவும்

3. தாவா சொத்தை பொறுத்து 2021ம் ஆண்டிற்கு காப்பீடு செய்ததற்கான இணையவழி ரசீது **வா.சா.ஆ.3** ஆகவும்

4. 24.04.2008 முதல் 29.11.2018 வரையிலான திருக்கருகாவூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் பயிர் இன்சூரன்ஸ் செலுத்தியதற்கான ரசீதுகள் (எண்ணிக்கை 7) **வா.சா.ஆ.4** ஆகவும்

5. 28.04.2021 தேதியிட்ட வாதி கொடுத்த தடங்கல் மனுவிற்கு சீர்காழி சார் பதிவாளர் வழங்கிய பதிலறிவிப்பு அசல் **வா.சா.ஆ.5** ஆகவும்

6. 06.03.1995 தேதியிட்ட தாவா சொத்தை பொறுத்து வாதியின் கணவர் குட்டியாண்டி பெயரில் ஏற்பட்ட கிரய ஆவணத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.6** ஆகவும்

7. 30.06.2021 தேதியிட்ட தாவா சொத்தை பொறுத்து 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு எழுதி வைத்த கிரய சாசனம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.7** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.